செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

JAFFNA COLLEGE
UNDERGRADUATE LIBRARY
NOV 5 '67

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்து சாதனம்

சிவமயம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ஞ (1889) ஆவணி மீ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-எகூ] யாழ்ப்பாணம்- பிலவங்க ஞூ ஐப்பசிமீ கஎ உ வெள்ளிக்கிழமை (3-11-1967) [இல-ஈ0]

## அன்னை அபிராமியின் அருள்பெருகு திருவளம்

[ ஆசிரியர் க. வை. ஆத்மநாதசர்மா ]



[ அகில உலகத்தையும் அருள் நெறிப்படுத்தும் அம்மையபபராகிய பெருமானை அன்னை அபிராமியாக நேரே தரிசிக்கும் பேறு பெற்றவர் அபிராமிப்பட்டர். தென் பாரதத்திலே வில்வாரண்ணியம் என்னும் சிறப்புப் பெயர் வாய்ந்த திருக்கடவூரில் ஏறக்குறைய ஆறுநூறு ஆண்டுகளுக்கு முன் அந்தண குலத்தில் அவதரித்தவர் அபிராமிப்பட்டர். அவர் ஆரியம் செந்தமிழ்ப் புலமை பெற்று வேதசிவாகமங்களைக் கற்றுக் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்தவர்; சங்கீத வன்மை சான்றவர். அவ்வளவோடமையாது திருக்கடவூர்ச் சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள அமுதகடேசுவரரிடத்தும் அன்னை அபிராமிதேவியிடத்தும் சிறந்த பக்தி பூண்டவராய், அனுதினமும் ஆன்மீக சாதனையாகவும் அச்சிவாலய பூஜை செய்யும் பேறும் பெற்றவர்.

அவர், ஒரு தை மாச அமாவாசை தினத்தில் தன்னை மறந்த நிலையில் அன்னை வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது தரிசனத்தின்பொருட்டு அங்குவந்த சரபோஜி மகாமன்னன் அவரைப் பார்த்து "சுவாமிகாள்! இன்று எத்தனை நாழிகை வரையும் அமாவாசையாகும்? என வினவினன். அதனைக் கேட்ட பட்டர் "இன்று பூரணை தினமன்றோ!" எனக் கூறினர். அந்த எதிர் மாற்றமான விடையைக் கேட்ட மன்னன், "அப்படியானல், இன்று சந்திரனைத் தரிசிக்க முடியுமா? என மீட்டுங் கேட்டான். அதற்குச் சந்தேகமென்ன எனக் கூறிவிட்டார் ஐயர். மன்னன் மீண்டு சென்ற பின்புதான், பட்டர் தாம் கூறியது தவறென உணர்ந்தார். ஆயினும் திடசித்தங்கொண்ட மெய்யன்பராதலின் மனங் கலங்கினரல்லர்.

அபிராமிப்பட்டர் அன்னை அபிராமி சந்நிதியில் ஆழமான குழியை உடனே அமைப்பித்து, அதில் தழல் மூட்டி, மேலே இருப்புச் சட்டம் பூட்டி அதில் நூறு கயிறுகளை மாட்டி உறுதியாக அமைத்து அதில் தாம அமர்ந்து இறைவியைத் தியானித்தபடி "உதிக்கின்ற" எனத் தொடங்கித் தேவி மீது பாமாலை சூட்

தொடர்ச்சி 2- ஆம் பக்கம்

உ
சிவமயம்

கனகமா வயிரமுந்து மாமணிக் கயிலை கண்டு
உனகனுயரக்கனுேடி யெடுத்தலு முமையாளஞ்ச
அனகனுய் நின்றவீச னூன்றலு மலறி விழ்ந்தான்
மனகனு யூன்றி னுனேல் மறித்து நோக்கில்லை யன்றே.

-திருநாவுக்கரசு சுவாமிகள்.

### சமயப் பிரசாரம்

திருமுருக; கிருபானந்தவாரியார்:

கொழும்பு ஜெயந்திநகர் (ஜிந்துப்பிட்டி) ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமிகோவிலில் எதிர்வரும் ஐப்பசி மீ 30 திகதி (16-11-67) மாலை 6-30 மணிக்கு மதுரை ஆதீன மகாவித்துவான், அருள் மொழி அரசு, திருமுருக கிருபானந்தவாரியார்! ஆசிரியர்: திருப்புகழ் அமிர்தம், அவர்களது தொடர்ச்சிச் சொற்பொழிவு நடைபெறும்.

கார்த்திகை மீ 8 திகதி 24-11-67 மாலை 6 மணிக்கு திருமுருக கிருபானந்தவாரியாரால் "முருகன்பெருமை" ஆராய்ச்சிச் சொற்பொழிவு நிகழ்த்தப்பெறும்.

## மதுரை ஆதீனம்
### ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் சமயப்பணி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் கதிர்காமத்திலிருந்து தவஞ் செய்கின்றவருமாகிய பெரியார் கிருஷ்ணனந்த முனிவர் இப்பொழுது இந்தியாவில் தல யாத்திரை செய்துகொண்டிருக்கின்றார். மதுரை திருஞானசம்பந்த ராதீனத்திலிருந்து ஆதீனத்தலைவர் புரிகின்ற சமயப்பணியைப்பற்றி ஒரு கடிதமெழுதியிருக்கின்றனர்.

21-10-67 அன்று கிட்டத்தட்ட ஆயிரம் கிறிஸ்தவர்கள் சைவசமயத்திற் பிரவேசஞ் செய்துள்ளனர். யோக நந்தேஸ்வரமடம் தவத்திரு ஸ்ரீ சங்கரானந்த சரஸ்வதி சுவாமிகளும் மகாவித்துவான் ஸ்ரீ ஆறுமுக நாவலரும் இம் மதமாற்றச் சடங்குகளுக்கு உதவி புரிந்தனர். மதுரையிலுள்ள பிரபல கிறிஸ்தவ டக்டர் ஒருவர் ஆதீனத்தில் தீக்ஷைபெற்றுச் சைவரானர். தான் சைவரானதற்குரிய காரணத்தையும் காட்டி ஒரு பிரசுரம் வெளியிட்டிருக்கின்றனர். ஒரு அமெரிக்கர் தீக்ஷைபெற்றுச் சைவரானர். அவருக்குச் சிவகுமார் என்ற நாமம் வழங்கப்பட்டது.

சந்நிதானம் இதுவரை பல நூல்கள் வெளியிட்டிருக்கின்றனர்.

1. கடவுளும் உயிரும்
2. விக்கிரகாராதனையின் தத்துவம்
3. இந்துமதக் கொள்கைகளையே கிறிஸ்தவ வேதநூலும் யேசுநாதரும் விளக்கியுள்ளனர்.
4. மரணபயம் தீரும்வழி.
5. இறந்தவர்கள் வாழும் நிலை
6. அற்புதச் செயல்கள்
7. சிந்தனையாளர் கேள்விகளுக்கு விளக்கங்கள்
8. Delhi Address

ஷ்டி ஆதீன கர்த்தராகிய சுவாமிகளுக்கும் எங்கள் சைவபரிபாலன சபைக்கும் நீண்டகாலத் தொடர்புண்டு. சுவாமிகள் மடாதிபதியாக நியமனம்பெற்று

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## ஆறு படை வீடுகள்

[ திரு. வை. முத்துக்குமாரசுவாமி B. A. ]

தமிழகத்தில் முருகவேளுக்கு எனச் சிறந்த மலைகள் ஆறு உண்டு. எந்த மலையும் அவருடைய சொந்தமலை என்னும்கொள்கையை பலநூற்றுண்டுகளாக தமிழ்மக்களநம்பி வந்துள்ளனர். இது 'சேயோன் மேய மை வரையுலகம்'' என்னும் தொல்காப்பியத்தாலும், "குன்றுதோருடலும் நின்ற தன்பண்பே" என்றும், "கூடற் குடியின... அச்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும் குன்று" என்றும், "பழமுதிர் சோலை மலைகிழவோனே" என்றும் திருமுருகாற்றுப்படைக் கூற்றுக்களினுல் வலியுறுகின்றது.

திருப்பரங் குன்றம்

மதுரைக்கு மேற்கு உள்ளது திருப்பரங் குன்றம். திரு முருகாற்றுப் படையில் முருகனுக்குரிய படைவீடுகளுள் முதலாக வைத்துப் போற்றப்படுகிறது. இது தேவாரப் பாமாலை பெற்றது. சுந்தரமூர்த்தி நாயனர் குன்றத்துமேவிய பரமனைத் தமிழ் நாட்டும் மூவேந்தருடன் சென்று வழிபட்டுத் திருப்பதிகம் பாடினர். "முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே மொழிந்த பாடல்" என்று சுந்தரர் கூறுகின்றார் பரம் பொருளாகிய ஈசன் கோயில் கொண்டமையால் அது பரங்குன்றம் என்னும் பெயர் பெற்றது. இது மதுரை மாவட்டத்தில் உள்ளது. இதுவே தெய்வநாயகியாரைத் திருமணஞ்செய்தஇடம் என்று கந்தபுராணம் கூறுகிறது.

2. திருச்சீர் அலைவாய்
(திருச் செந்தூர்)

தென் பாண்டி நாட்டில் கடற்கரைக் கோயிலாக விளங்குகின்றது செந்தில் மாநகரப்பதி நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று நிலவும் செந்தில் மாநகர்க் கந்தன் கோவில் திருச்சீரலைவாய் என்று திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் போற்றுகின்றார். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் "சீர்கெழு செந்திலும் செங்கோடும் குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன்" என்கிறார். கந்தபுராணம் உற்பத்திகாண்டத்தில் கடல் சூழ்ந்த வீரமகேந்திரத்தில் அரசு புரிந்த சூரன்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

### கமச்செய்கையில் கல்லூரிமாணவர்

மறவன்புலோ சகலகலா வல்லி வித்தியாசாலை மாணவர்கள் சென்ற 3-11-67 -ல் ஷ்டி வித்தியாசாலைக் கருகிலுள்ள வயல்களுக்குச் சென்று வயலிலுள்ள களைகளை அகற்றிக் கமத் தொழிலாளருக்கு உதவி செய்வர். வயற்சொந்தக்காரர்கள் இடைநேரச் சிற்றுண்டி வழங்குவர். (ந. சி.)

# இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

பிலவங்க ஹூ ஐப்பசிமீ கஎ - உ வெள்ளிக்கிழமை [1967]


## திருப்பெரு வடிவம்

சூரபன்மனுடைய சேனைகள் யாவும் அழிந்துபோக அவன் தனியேநின்று போர்செய்ய நேர்ந்தது. அவன் ஒன்றன்பின் ஒன்ருகப் பலவகையான மாய வடிவங்களைக் கொண்டான். அவைகள் யாவற்றையும் குமாரக்கடவுள் அழித்தருளினர் பின்பு ஒரே சமயத்தில் கோடிக்கணக்கான மாயாவடிவங்களைக் கொண்டு அவரைச் சூழ்ந்துநின்ருன். குமாரக்கடவுள் அவற்றை அழித்தற்காக ஆயிரங்கோடி அம்புகளைச் செலுத்தினர். அவைகள் சென்று அவ் வடிவங்களை அழித்தன.

அப்பொழுது முருகப்பெருமான் சூரபன்மனை நோக்கி 'ஓ சூரபன்மனே! நீ அழியும் மின்னலைப் போன்ற பயனற்ற பல பொய் வடிவங்களை நம்முன் கொண்டாய். அவற்றையெல்லாம் அழித்தோம். இப்போது அழியாத நம்முடைய பெரிய வடிவத்தைக் காட்டுவோம் நீ செய்த தவத்தால் காண்பாய்'' என்று கூறினர். கடல், உலகம், திக்குபுவனம். அண்டம், தேவர்கள், உயிர்கள் ஆகிய எல்லாம் அடங்கப்பெற்ற மிகப் பெரியதோர் திருவடிவம் கொண்டருளினர். உள்ளடியில் மலைகளும், புறவடியில் கடல்களும், காலடிவிரல்களில் இடி, விண்மீன், கிரகங்களும் பரட்டில் வருணன், குபேரன், நிருதி அரக்கர்களும்; கணைக்கால்களில் முனிவர்களும், முழந்தாளில் வித்தியாதரர் முதலியவர்களும், தொடையில் இந்திரனும் சயந்தனும், [illegible] மூலத்தில் இயமனும் காலனும், அரையில் அசுரர்களும், விலாப்புறங்களில் தேவர்களும், மூலாதாரத்தில் நாகர்களும், குறியில் அமிர்தமும், நாபியில் சிவராசிகளும். மார்பில் சகல சாத்திரங்களும், உபவீதத்தில் ஞானமும், உரோமத்தில் அணடங்களும், கணகளில் சூரிய சந்திரர்களும், காதுகளில் திக்குகளும், நெற்றியில் பிரணவமும், தலையில் பரமசிவமும் பொருந்தப்பெற்ற ஒப்பற்ற பேருருவத்தைக் காட்டியருளினர். தேவர்கள் சண்முகக் கடவுளின் திருவுருவத்தைக் கண்டு மனம் நடுக்குற்று நின்ருர்கள். ஆறுமுகக் கடவுள் தேவர்களை நோககி 'அஞ்சற்க! அஞ்சற்க! என்று கூறித் திருவருள் புரிந்தார்.

சூரபன்மன் ஆதியும் அந்தமும் இல்லாத அப்பெருஞ் சோதியாகிய சண்முகப்பெருமான் கொண்ட பேருருவத்தைக் கண்டு மிகுந்த வியப்படைந்தான். அப்போது முருகக்கடவுள் அவனுக்குச் சிறிது நல்லுணர்ச்சியை நல்கினர். நல்லுணர்வு பெற்ற சூரபன்மன் "இப்பாலகர் அவுண சேனைகள் யாவற்றையும் ஒரு கொடிப்பொழுதில் அழித்தருளினர். உலகங்கள் தோறும் என்னோடு போர்புரிந்து என்னைச சேர்ந்தவர்கள யாவரையும் அழித்தார். அழகிய மயில்வாகனத்தின்மீது எழுந்தருளிய இறைவனை அற்பாளில் பாலகன் என்றெண்ணினேன். இவர் பிரம, விஷ்ணு, முதலிய தேவர்களுக்கெல்லாம் மூலகாரணமாய் உள்ள மூர்த்தியன்றே. முன்னர்த் தூதுவந்த வீரவாகுதேவர் வேலாயுதமேந்திய கையையுடைய இவரை "விருப்பு வெறுப்பற்ற பராபரத்தின் முதல்வர்" என்று கூறினர். இவரே 'ஈசன்' என்பதை இங்கு கண்டேன். எல்லாப் பொருள்களையும் உள்ளடக்கியுள்ள இக்கடவுளின் ஓர் உரோமத்தில் என்னுடைய ஆயிரத்தெட்டு அண்டங்களும பிறவும் தங்கிநிற்கின்றன. ஆயிரங்கோடி மன்மதர்களின் அழகெல்லாம் திரண்டாலும இவருடைய திருவடியின் அழகுக்குச் சற்றும் ஈடு செய்யாது. இக்கடவுளை என கால்கள் வலமவருதல் வேண்டும். கைகள் தொழுதல்வேண்டும. தலைகள் வணங்குதல் வேண்டும். நாப் புகழ்ந்து பேசுதல்வேண்டும். என் உடலும் உணர்வும் அனலிற்பட்ட வெண்ணையேபோல் வலியிழந்து உருகின". என்று கசிந்து கூறினன். முருகக்கடவுளை வழிபடுதலை அவனுடைய மானம் தடைசெய்தது. தம பேருருவத்தை நீக்கி முன்போல் மயில்வாகனத்தில் பழைய வடிவத்தோடு காட்சியளித்தார். சூரபன்மனுக்கு அளித்த ஞானத்தை நீககினர். அவன் முன்போல் அகம்பாவம் பூண்டு போரைத் தொடங்கினன்.

இறைவன் திருவடியை அடைவதற்கு அவருடைய திருவருளின் துணையின்றி யமையாத தென்ற உண்மையை இத்திருப்பெருவடிவம் உணர்த்துகின்றது. முற்பிறவிகளிலே தவஞ்செய்தவர்களுக்கே அத்திருவருள் துணைபுரியும். ஈண்டு இவ்வான்மாககளுக்கு முன்செய்தவத்தான் ஞானம் நிகழும்' என்று சிவஞானபோதம் எட்டாம் சூத்திரத்திலும் 'தவமெனும் மாட்சி யெய்துமேல், தெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேரும்' என்று கந்தபுராணததிலும் கூறியிருப்பதையும் சிந்திக்க. ஆன்மா பரதந்திரன் என்றமையையும் சிவபெருமானே அவ்வான்மாவுக்குத்தோன்ருத்துணையாகவுள்ளாரென்பதையும் இத் திருப்பெருவடிவம் விளக்கும் சூரபன்மனும் முன்செய்த தவத்தின் வலிமையினுல் இத திருப்பெரு வடிவத்தைத் தரிசித்துப் பின்பு ஆறுமுகப்பெருமானுடைய ஞான சத்தியாகிய வேலினல் அவனுடைய மாமர வடிவம் இருகூருக்கப்பெற்று சேவலும் மயிலுமாகி முருகப்பெருமானுக்குத் திருத்தொண்டு புரியும் பாக்கியத்தை யடைந்தான்.

இறைவன் திருவருளால் நல்லுணர்ச்சி யடைபவர்கள் அகந்தை முற்ருக நீங்கப்பெற்றுத் தம்மைச் சிறியவராக மதிப்பார்கள. 'நாயிற் கடையாக் கிடந்த அடியேன்' என்றனர் மாணிக்கவாசக சுவாமிகள். "குலம் பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்" என்றனர் திருநாவுக்கரசு சுவாமிகள். "என்போல் எளியவரும் எங்கெங்கும் பார்த்தாலும் உன்போல் வலிய வரும் உண்டோ பராபரமே" என்றனர் தாயுமான சுவாமிகள்.

பசுக்களாகிய நம்முடைய இலக்கணங்களையும் நம்மைப் பந்தித்த பாசங்களின் இலக்கணங்களையும் பசுபதியாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும் எதனைப் பெரிய சிவபெருமான் எததனையும் சிறிய நமக்கெல்லாம் இரங்கி எளிவந்து ஓயாது என்றும உபகரிக்கும் பெரும் கருணையும் இவ்வியல்பின் அனந்த கோடியில் ஒரு கூறயினும் உடையவர் பிறர் ஒருவரும் நமக்கில்லாமையும இடையருது சிந்திக்கச் சிநதிக்க அச் சிவபெருமானிடத்தில் அன்பு விளையும்" என்றனர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

---

### எதிர் பாருங்கள்

வண்ணுர்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராக நீண்டகாலம் கடமையாற்றி அண்மையில் இளைப்பாறியவரும் வடமொழி தென்மொழி வல்லுனரும் பத்திரிகைகளுக்கு இலககியம், சமயம சம்பநதமான கட்டுரைகளை நீண்டகாலமாக எழுதி விஷயதானஞ் செய்கின்றவரும் பல சமயநூல்களின் ஆசிரியரும் வடமொழியிலுள்ள கிரியை, தோத்திரம் சம்பந்தமான நூல்களைத் தமிழாக்கம்செய்தவரும் 'ஞானதீபம்' என்னும் சஞ்சிகையின் ஆசிரியருமான சிவஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா அவர்கள் சிறந்த பராசக்தி அடியாராகவுள்ள அபிராமிப்பட்டரால இயற்றப்பட்ட 'அபிராமியந்தாதி என்னும நூலிலுள்ள செய்யுட்களின் பொருளை அடியார்கள் எளிதின் அறியும்வண்ணம் வசன நடையில எழுதி உதவியுள்ளனர் அதனைப் பாகம் பாகமாக, தொடர்ந்து இப் பத்திரிகையில வெளியிடத்தீர்மானஞ்செய்துள்ளோம். இக்கட்டுரையின ஓர்பகுதி இறறைப் பிரசுரத்தின முற்பக்கத்தில் வெளியாகியுள்ளது. ப—ர்.

### அன்னை அபிராமியின்......

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

டுவாராயினர். உடனே தேவி பிரசன்னமாகாமையால் ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ஒவ்வொரு கயிருக அரிக்தார். "விழிக்கே அருளுண்டு" என்று தொடங்கும் எழுபத்தொன்பதாவது பாடல் முற்றியவுடன் அபிராமிதேவி அவருக்கு எதிரே தோன்றித் தமது திருத்தோடுகளுள் ஒன்றினைக் கழற்றி வானத்தில் வீசியருளி, "அன்பனே! உனது கூற்றை மெய்ப்பித்தேம். உன் கவலை யொழிவாயாக. உனது பாமாலையை உவந்து ஏற்றேம்" எனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினர். அமாவாசை இருளில் தேவி திருவருளால் உதித்த பூரண சந்திரனை யாவரும் கண்டு வியந்தனர். அரசன் அபிராமிபட்டரது மெய்த்தொண்டனாயினன். அவர் பின்பு உறியின் மிகுதிக் கயிறுகளை அரியாமல் பாடி முடித்த பிரபந்தமே அபிராமி அந்தாதி எனப்படுவது. அது இறைவனது திருவருளை இலகுவிற் பெறுமபொருட்டு எவரும எப்போதும் ஓதத் தக்கது. செமபொருள் விரிவுடையது மெய்யன்பர்களை உளங்கொண்டு அதனை ஓதுவிக்கும் முகமாக அதன் செம்பொருளை இலகுவான வசன நடையில் எழுதும்படி அன்னை திருவருள் தூண்டுகின்றது "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" தூண்டுந் திருவருள் துணை நிற்குமன்றே!]

#### விநாயக வணக்கம்

ஓங்கார வடிவுகொண்ட கொன்றை மலர் சிறக்க அதனை மாலையாக அணிபவர் சிதம்பர சபாநாயகர். அப் பிரானுரது ஐந்தொழிற் திருப்பெருங் கூத்துக்குக் காரணியாகி அவரது இடப் பாகத்தில் அமைந்திருப்பவர் சண்பகப் பூமாலை அழகுபெற அணியும் அன்னை சிவகாமசுந்தரியாவர். அவ் விருவரும் ஒருங்கமையும் காட்சியாக அவர் தம் மூத்த திருக்குமாரர் எனப் பெயர் புனைந்து கருநிறம் பொருநதிய திருமேனி கொணட மகாகணபதியே! அகில உலகத்தையும் கருவிற்கொள்ளாது பெற்றருளும அன்னை அபிராமி தேவியின் திருவருட் பெருக்கு விளங்கத் தமியேன் எடுத்துக் கூறும அந்தாதித் தொடைப்பொருள் சிறக்க அடியேனது தியானத்தில் நிலை பெற அருள் வீராக.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

---

### பிரிவுபசாரக் கூட்டம்

யாழ்-சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையின் அதிபராகச் சென்ற 1959-ம் ஆ. ஏப்பிரல் மீ முதல் 1967-ம் ஆ. அக்டோபர் மீ வரை கடமையாற்றியதுடன் "இந்துசாதனம்" "Hindu Organ" பத்திரிகைகளின் பதிப்பாளருமாகவிருந்த நாரந்தனையைச் சேர்ந்த கௌரவ ஐயம்பிள்ளை சின்னத்துரை, அவர்கட்கு அகடோபர் மீ 29-ந் உ யாழ்-சைவபரிபாலன சபையினராலும், யாழ்-சைவப்பிரகாச யந்திரசாலை ஊழியர்களாலும் "இந்துசாதனம்" "Hindu Organ" பத்திரிகாலயத்தாராலும் யாழ்-சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சபைத் தலைவர் சிவநெறிக் காவலர் திரு: த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் பிரிவுபசாரக் கூட்டம் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

அன்னரின் சேவையை இனிது பாராட்டிச் சைவசமயத் தலைவர்களாகிய மூவர் முதலிகள் அளித்துள்ள முதுசொத்தாய தேவாரத் திருமுறைகள் ஏழும் உரையுடன் கூடிய பிரதிகள் அன்பளிப்பாகவும் நன்றியறிதற் சின்னமாகவும் வழங்கப்பட்டன. பிரிவுபசாரக் கூட்டத்துக்குச் சமுகமளித்தவர்களுடன் கூடிய நிழலுருவப்படமும் எடுக்கப்பட்டது.

முதலியார்: செ. முத்துத்தம்பி "Hindu Organ" பத்திராதிபர், திரு இ. ம. சிவப்பிரகாசம், இந்துசாதனம் பத்திராதிபர், சித்தாந்த சிரோமணி மு. மயில்வாகனம் அச்சியந்திரசாலை ஊழியர் திரு: த. செல்லையா ஆகியோர் அன்னரின் சேவையைப் பாராட்டி உரை நிகழ்த்தினர்.

ஈற்றில் திரு: சின்னத்துரையவர்கள் பதிலுரை வழங்கி எல்லோர்க்கும் நன்றி நவின்றனர்.

---

### சூரசங்கார உற்சவம்

காரைநகர் ஈழத்துச்சிதம்பரம் தேவஸ்தானத்தில் 7-11-67 செவ்வாய்க்கிழமை ஷஷ்டி உற்சவம் வெகு விமரிசையாக நடைபெறும்.

X X X

நல்லூர்க்கந்தசுவாமிகோவிலில் ஷஷ்டி தினத்தில் வெகு அலங்காரமாக ஷஷ்டி உற்சவம் நடைபெறும்.

X X X

### இயம சங்காரம்

நல்லூர் கைலாசநாத சுவாமி கோயிலில் ஐப்பசி மீ 24 உ (10-11-67) வெள்ளிக்கிழமை பிற்பகல் இயமசங்கார உற்சவம் நடைபெறும். மாலை 6 மணியளவில் மார்க்கண்டேயர் பூசை சிறப்புற நிகழும்.

### ஆறுபடை வீடுகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கந்தசுவாமிகோவிலிலும் மாவிட்டபுரத்திலும் கந்தவனக் கடவையிலும கிழக்கு மாகாணத்து மண்டூர்த் கந்தசுவாமி கோவிலிலும் உருத்திரபுரத்து ஏழுமலைக் கந்தசுவாமி கோவிலிலும் வேறுபலதலங்களிலும் முருகனின் திருவருள் பெரிதும் காணப்படுகின்றது.

# சமய தீஷை

ஐப்பசி மீ 22 உ (8-11-67) புதன் கிழமை காலை 8 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையாதரவில் கல்லூரி வீதியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காணவாய்; ஸ்ரீமத்: கை. திருஞானசம்பந்தக் குருக்கள், அவர்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் பிறருக்கும் சமய தீக்ஷை செய்து வைப்பார்கள். சமய தீக்ஷை பெற்றுக்கொள்ள விரும்புகின்றவர்கள் குறித்த தேதிக்குமுன் தங்கள் பெயரைச் சபையினது சமயப்பிரசார அமைச்சருக்கு அறிவிப்பார்களாக. ஒவ்வொருவரிடமுமிருந்து செலவுக்காக ரூபா: 2-00 பெறுக் கொள்ளப்படுப. தீக்ஷை பெறுபவர்கள் ஆசார சீலராய்த் தீக்ஷா மண்டபத்தைக் குறித்த நேரத்தில் சேர்வார்களாக.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 2-11-67.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்

## நாவலர் சொத்துக்களைப் பேணுதல்

ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுடைய சொத்துக்களைப்பாதுகாப்பதற்கும் அவற்றை அவருடைய நோக்கத்துக்கு அமைய நிருவகித்தற்கும் வேண்டிய வழி வகைகளை ஆலோசிப்பதற்கு யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நாவலர் மண்டபத்தில் சிவநெறிக் காவலர் திரு: த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சைவப் பிரமுகர்களுடைய பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. நாவலர் தருமங்களைச் செவ்வனே நிருவகிப்பதற்கு நீண்டகாலமாக உழைத்து வருகின்ற சைவப் பெரியார் முதலியார்: G. சுப்பிரமணியம் அவர்களும் சமுகமளித்தனர்.

கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேறின:

1. சிதம்பரம் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலைக்குரிய உசுப்பூரிலுள்ள நெற்காணி 30 ஏக்கரையும் தர்மகர்த்தாச் சபை விற்பனை செய்ததையிட்டு இக்கூட்டம் பெரிதும்கவலையடைகின்றது.

2. யழ்ப்பாணத்திலுள்ள நாவலருடைய தர்மசொத்துக்களும் செவ்வனே நிருவகிக்கக் கூடிய நிலையிலில்லையென்பதை யறிந்து இக்கூட்டம் கவலையடைகின்றது.

அச்சொத்துக்களின் வருவாய் பின்வருவன வற்றிற்கு உபயோகிக்கப்படவேண்டும்:

1 வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தாபரித்தல்.

2. உயர்தர தமிழ்க்கல்வி கற்பித்தல்.

3. சமயாட வகுப்பு நடாத்துதல்.

4. குருவகுப்பு நடாத்துதல்.

5 ஊர்கடோறும் சமயப்பிரசாரஞ் செய்தல்

இவைகள் இப்பொழுதுதிருப்தியான முறையில் நடைபெறுவதில்லை

யாழ்ப்பாணத்திலுள்ள நாவலர் சொத்துக்களை அவருடைய நோக்கத்துக்கு அமைய நிருவகிப்பதற்குரிய வழி வகைகளை மேற்கொள்ளுவதற்குப் பின்வருவோரை உறுப்பினராகக் கொண்ட ஒரு உபசபை நிறுவப்பட்டது

திரு: த. முத்துச்சாமிப்பிள்ளை
திரு: சிவ. உ. சோமசேகரம்
முதலியார்: த. சுப்பிரமணியம்
திரு: சி. ஆ. சதாசிவம்பிள்ளை
திரு: மு. வைத்தியலிங்கம்
பிரம்ம ஸ்ரீ, க செ. பாலசுப்பிரமணிய ஐயர்
திரு: மு. மயில்வாகனம்

இவ்வுபசபையின் அழைப்பாளராக திரு: மு. மயில்வாகனம் தெரிவுசெய்யப்பட்டனர். (ந. கி.)

## மதுரை ஆதீனம்

( 1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுக்குச் செல்லுமுன் எங்கள் சபை அவருக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தியது. எங்கள் சபை நடாத்திய சைவமகாநாடொன்றில் தலைமை வகித்துச் சிறந்த பணியாற்றியுள்ளனர்.

## அன்னை அபிராமியின்

( 2-ம் பக்கத் தொடர்ச்சி )

நூல்

### 1. அன்னை என் விழுத்துணை

உதயஞ் செய்கின்ற பால சூரியன் செம்மைநிறம் படர ஒளிர்கின்ருன். மஞ்சாடி மலர் செவ்வண்ணம் பொலிவது. அறிஞர் மதித்துக் கணிக்கும் செவ்வொளி வீசுவது மாணிக்கமணி. மாதுளம் பூவின் செவ்வண்ணம் கண்ணைக் கவரும் வனப்புடையது. மின்னற் கொடியின் செவ்வொளி காண்பவர் கண்களைக் கவருவது. குங்குமக் குழம்பு திணிந்த செவ்வண்ணமுடையது. இந்த ஆறு பொருள்களிடத்தே காணும் செம்மையெல்லாம் அன்னை அபிராமிதேவியின் திருமேனிச் செம்மைக்கு ஒவ்வோரமையமே ஒப்பாகலாம் என நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன என்று செந்தாமரையாசனியாகிய மகாலக்குமி தோத்திரம் செய்கின்ருள். அந்த அன்னை அபிராமி தேவி அடியேனது உயிர்த் துணையாவாள்.

(வளரும்)

## ஆறுபடை வீடுகள்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் அசுரனை வென்று அறநலைத நிறுத்தக் கருதிய முருகவேள் செந்திற் பதியைப் படைவீடாகக் கொண்டார் என்று கூறப்படுகிறது. முருகப் பெருமானை வெற்றி வீரனாகக் கண்டது செந்திலமாநகரம். இது திருநெல்வேலிக்குச் சமீபத்தில் உள்ளது.

### 3, திரு ஆவினன் குடி

திரு ஆவினன் குடி முருகனுக்குரிய படை வீடுகளுள் ஒன்று, இதுவே பழனி என்னும் தலத்தின் பெயர். ஆவியர் குலம் பழனி மலைப்பகுதிகளில் வாழ்ந்து வந்தார்கள். கடையெழு வள்ளல்களில் ஒருவனுகிய பேகன் என்பவன் ஆவியர்குலக் கோமான் ஆவன். பழம் நீ என்பதுதான் பழனியாக மருவியது என்று கூறப்படுகிறது. முருகப் பெருமான் ஆண்டிவடிவமாக விளங்குகின்ருர் இப் பழனித் தலத்தில். இது பாண்டிநாட்டில் உள்ள மலைத் தலம். பொதினி என்பது இதன் பழம்பெயர். மதுரைக்குச் சமீபத்தில் உள்ளது.

### 4 திருவேரகம்

ஏரகம் என்னும் திருப்பதியிலே முருகன் எழுந்தருளியிருத்தலும உரியன். இங்கே அவனை அந்தணர் உரியகாலத்தைத் தெரிந்து துதிப்பர் என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. இத் திருவேரகம கும்பகோணத்து மாவட்டத்தில உள்ளது. இது சுவாமிமலை எனவும் படுகிறது.

"உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து ஆறெழுத்து அடக்கிய அருமறைக்கேள்வி நா இயல் மருங்கில் நவிலப் பாடி விரைஉறு நறுமலர் ஏந்திப் பெரிது உவந்து ஏரகத்து உறைதலும் உரியன" என்று திருமுருகாற்றுப் படை கூறுகின்றது.

### 5. குன்று தோருடல்

தொண்டை நாட்டில்திருக்கழுக்குன்றம் பாடல பெற்ற மலைப் பகுதியாகும. பாண்டி நாட்டில் குன்றை அடுத்துள்ள ஊர் குன்றூர் என்றும், குன்றத்தூர் என்றும், குன்றக்குடி எனறும் பெயர் பெறும். நீலகிரி என்னும் மலையில் இப்பொழுது குன்னூர் என வழங்குவது குன்றூரேயாகும்.

திருமுருகாற்றுப் படையில் வேட்டுவப் பெண்கள் தொண்டகம் என்னும் பறையைக் கொட்டி குரவைக் கூத்து ஆடுவார்கள் என்றும், வேலனும இப் பெண்களுடன் இமமலையில் ஆடுவான் என்றும் காணப்படுகிறது. இராமநாதபுர மாவட்டத்தில் குன்றக்குடி உண்டு.

### 6. பழமுதிர் சோலை

சோலை என்ற சொல் சில ஊர்ப் பெயர்களில் உண்டு. மதுரையின் அருகேயுள்ள அழகர் கோவில் பழங்காலத்தில திருமால் இருஞ்சோலை என்று பெயர் பெற்றிருந்தது. பழமுதிர் சோலை முருகப் பெருமானது படைவீடுகளில் ஒன்று என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

அதில் அன்பர்கள தன்னை ஏத்துதலினாலேதான் மனமுவந்த இடங்களிலும் முருகன் வசிப்பான். படிமத்தனுகிய வேலவன் செய்த வெறியாடு களத்திலும், காட்டிலும், சோலையிலும், ஆற்றின் நடுவிலுள்ள அழகு வாய்ந்த திட்டுக்களிலும், ஆறுகளிலும், குளங்களிலும், இன்னும பல வேறிடங்களிலும அவன் இருத்தற் குரியன்.

### ஈழத்துப்பாடிவீடு கதிர்காமம்

தமிழகத்திலே உள்ளன ஆறுபடைகள். அதைப்போலவே நமது ஈழத் தமிழகத்திலேயும் படை வீடுகள சில உண்டு. இவற்றுள் கதிர்காமம என்பது முருகன் திருவருள் நிறைந்து விளங்கும மலைத் தலமாகும். கதிர்காமத்தை அருணகிரிநாதர் 14ம் நூற்ருண்டில் கிளி ரூபமாகத் தரிசித்தார் என்றும கூறப்படுகின்றது.

அருணகிரிநாதர் கதிர்காமத்தைப்பற்றி சிலதிருப்புகழ்களைப் பாடியுள்ளார் அவற்றுள் ஒன்றில்

"...கனகள் பீதிப் புசித்தமராடி
கதலி குதத்தினிற் பயிலு
மீழத்தினிற்
கதிர்காமக்கிரிப் பெருமானே"

என்று கூறப்படுகின்றது.

கதிர்காமக்கோவிலுக் கெதிரில் மாணிக்க கங்கை ஆறு உண்டு. அதன் தென்கரையில சிறிது ஏறக் குறைய மூன்று மைலுக்கு அப்பால் ஒரு குன்று உண்டு. அதற்கு ஏமகூடம் என்று பெயர். கதிர்காமப் பதிக்கு இரண்டு மைலுக்கு அப்பால் மாணிக்க கங்கைக் கரையிலேயே செல்லக் கதிர்காமம உண்டு.

தேவர்களின் படைத் தலைவனுக உள்ள கார்த்திகேயன் சூரபன்மன் மேல் படையெடுத்து வந்து இலங்கையில் உள்ள ஏமகூடத்திலே பாடிவிடு அமைத்தான் என்பது புராணவரலாறு. அவர்வள்ளி நாயகியாருடன் காதல் புரிந்து திருவிளையாடல் நடத்தித் தங்கியவிடம்செல்லக்கதிர்காமம.

இன்றுள்ள முருகன் கோவில் 1581-ம ஆண்டில் 1-ம் இராசசிங்கனுல் அமைக்கப் பட்டது. கதிர்காமத்தில் முருகா! முருகா! என்னும் நாமத்தை ஓதும் பக்தி அடியார்களின் ஓசை வானளாவி நிற்கும் முருகனின் அருள் நடமாடுகின்றது. இங்கு சாதி, மதம், ஆண், பெண், ஊர், மொழி, உயர்வு, தாழ்வு என்னும் பாகுபாடுகள் யாவையும் மறந்து பக்திப்பரவசநிலையில் அடியார் பலர் வழிபடுகின்றதைக் காண்கிருேம.

ஈழத்திலே உள்ள செல்லச்சந்நிதி பருத்தித்துறையில் இருந்து $7\frac{1}{2}$ மைல் தொலைவில் உள்ளது. அது யாழ்ப்பாணத்தில் இருந்து 13 மைல் தூரம். வலவெட்டித்துறையில் இருந்து $2\frac{1}{2}$ மைல் தூரம். இது ஒரு சினனக் கதிர்காமம எனலாம்.

அங்கு பல அன்னசத்திரங்கள் உண்டு. அங்கு பல ஏழைகளுக்குத் தினசரி மூன்று வேளைகளிலும அன்னம் அளிக்கப்படுகிறது. கதிர்காமத்தில் உள்ளதைப்போல அருள் இங்குங்கிடைக்கிறது. இதுவும் ஈழத்துப் பாடி வீடாகுபா?

யாழ்ப்பாணத்து நல்லூர்

தொடர்ச்சி 8-ம் பக்கம்

### திருக்கேதீச்சரம் பாதயாத்திரை

எதிரே வரும் (10-11-67) வெள்ளிக்கிழமை நல்லைக்கந்தன் ஆலயத்திலிருந்து பசளைப்பாதயாத்திரை புறப்பட்டு கண்டிவீதி, பூனகரி மார்க்கமாக 15-ம் தேதி திருக்கேதீச்சர ஆலயத்தைச் சேரும். (ந. கி.)

## பெருநேறியைப் போற்றி வாழ்வோமாக

"சைவ மாணவர்கள் சைவ வாழ்க்கையைக் கைக்கொண்டொழுகி வரவேண்டும்; சமய உண்மைகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும் — அறிந்து கொள்ளும் அதேநேரத்தில அப பெருநேறியைப் போற்றி அவ்வழி வாழ்ந்தும் வரவேண்டும்— அவ்வளவில அமையாது 'யான் பெற்றஇன்பம் பெறுக இவ்வையகம என்னும்" பரந்த நெறியில எம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும். இன்றுள்ள நிலையில் எமது கழகம் ஆற்றி வந்த பணிகள் போற்றத் தகுந்தவை; மேலும் நல்லபணிகளில ஈடுபட்டுழைகக இப்புனித புண்ணியதினத்தல் திருவருள்துணையை வேண்டி, திட சங்கற்பம் பூணுவோமாக"

இவ்வாறு சென்ற 1-11-67 புதன கிழமை (தீபாவலித் தினத்தன்று) நிகழ்ந்த யாழ். நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டத்தில் தலைமை உரை நிகழ்த்தும் போது கழகத் தலைவர் திரு. க. சொக்கலிங்கம் ஆசிரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இக்கூட்டம யாழ் நாயன்மார்கட்டு பாலர்பராமரிப்புக் கழக மண்டபத்தில் நடைபெற்றது. செயலாளரின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்பட்டது. கழக உபவிதிகளைப் பரிசீலனை செய்து சமர்ப்பிக்க மூவரைக் கொண்டகுழு அமைக்கப்பெற்றது. புதுவருட உத்தியோகத்தர்தெரிவு நடைபெற்றது.

காப்பாளர்கள்: நல்லை, மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தலைவர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான சுவாமிகள், சிவஸ்ரீ செ இரத்தினசபாபதி ஐயர் அவர்கள்.

தலைவர்: திரு. க. சொக்கலிங்கம் ஆசிரியர் அவர்கள். செயலாளர்: கா. இரகுநாதன் பொருளாளர்: திரு. சி. இராசேந்திரம் அவர்கள். நிர்வாக சபை அங்கத்தவர்களும் தெரியப்பெற்றனர். (ந. கி)


## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை ரோட்டில் 284-ம் இலக்கக் கடையில் கா. ந. இளையதம்பி அவர்களிடம் 1966-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25-ந் (25-10-66) திகதிக்கு முன் வைதத அடைவுகளில மீட்கப்படாதவைகளை 1967-ம ஆண்டு நவம்பர் மாதம் 21-ந் திகதி (21-11-67) செவ்வாய்க் கிழமை காலை பத்துமணி தொடக்கம் மேற்படி கடையில வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

"இராசகிரி"
343, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம். 9-10-67.

வி. செ, குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
M, 293, 27-10-67.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
வழக்கு, இலககம்: M. B. 4220
மானிப்பாய் 1. முத்துக்குமாரு நாகராசாவுப் மனைவி
2. கனகம்மாவும் —வழக்காளிகள்
எதிராக
மானிப்பாய் 1. துரையப்பா சோமசுந்தரமும் மனைவி
2. நாகம்மாவும், —எதிராளிகள்

M B. 4220-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த உத்தரவின்படி, கீழ்க்காணும் இருதுண்டு ஆதனங்கள் 1967-ம் ஆ டிசம்பர் மாதம் (மார்கழி) 5உ (5-12-67) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடககம அந்தந்த ஆதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தி என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 4119 மேலும் 3000 ரூபாவுக்கு 30-8-61 தொடக்கம் 7-3-63 வரைக்கும் வருடமொன்றுக்கு 100-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கு இறுபடும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 250-25சதமும், இதில் ரூபா 4225 குறைய.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோயிற்பற்று மானிப்பாய் இறை "தச்சன் தோட்டம்" நிலப்பரப்பு 6 குளிகள் வீடும் செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு முத்துவேலு நல்லையாவுக்கும் பங்காளர்களுக்குமுரியவாதனம். வடக்கு சாம் சபாபதி பங்காளர்கள் நவரெத்தினம கைம்பெண் அன்னரெத்தினத்துக்கும் பங்காளர்களுக்குமுரியஆதனம் மேற்கு துரையப்பாசோமசுந்தரத்தினுதனம் தெற்கு மேற்கு ஒழுங்கையிலிருந்து இந்தக் காணியருகே வரும் கையொழுக்கையின் முகப்பும் கதிர்காமர் தம்பிஐயாவுக்கும், வேலுப்பிள்ளை முத்தையாவுக்குமுரியவாதனம் இது முழுவதும்

2. ஷை மானிப்பாய் இறை "தச்சன் தோட்டம்" நிலப்பரப்பு 1, கிணறும், செய்பயிர்களும இதற்கு எல்லை கிழக்கு காலஞ்சென்ற வெற்றிவேலு தம்பையாவன் உரிமைக்காரர்களினுதனம், வடக்கும் மேற்கும் நவரெத்தனம் கைபெண் அன்னரெத்தினத்துக்கும் பங்காளர்களுக்குமுரியவாதனம், தெற்கு துரையப்பா சோமசுந்தரத்தினுதனம் இது முழுவதும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொம்மிஷனரும்,
'இராசகிரி" ஏல விற்பனவாளர் & விலைமதிப்பாளர்.
643, காங்கேசன் துறைவீதி. யாழ்ப்பாணம்.
3-11-67, எம். 294, 3—11—

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு வழக்கு இலக்கம் 9373.

1. அரியகுட்டி நாகரெட்டினம் பருத்தித்துறை —வழக்காளி
எதிராக
1. மெல்கியர் இராமலிங்கம்
2. அவர்மனைவி செல்லம்மா, கரணவாய்வடக்கு —எதிராளிகள்

மேற்குறித்த வழக்கில் தீர்த்த தீர்வைப்படியும், குறித்த கோட்டால் எனக்கனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ்க் காணும் ஆதனங்களை 1967-ம் ஆண்டு டிசெம்பர் மாசம் 11-ந் திகதி திங்கட்கிழமை (11-12-67) முற்பகல் 9-30 மணி அளவில் குறித்த ஆதனத்திடமாக இருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக்கோயிற்பற்று 1. கரணவாய் இலகாமக்குறிச்சியிறை வல்லுவத்தை தோட்டம் 1, ஷை நில. பர 7½ ஷை வல்லுவததை தோட்டம் 1, ஷை நில, ப 17, 3/8 கூட்டிய நில பர 37 குளி 9¾ எல்லைகிழக்கும் தெற்கும் கரணவாய் மூதத நயினர் கோயிலாதனம், வடக்கு பொன்னம்பலம் கந்தையாபிள்ளைக்குடைய வாதனம், மேற்கு வேலுப்பிள்ளை வல்லிபுரம் மகள் யோகேஸ்வரிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம்' இவ்வெல்லைகுட்பட்ட நிலம் பனைகள், வடலிகள், தென்னைகள் கிணறு அடக்கலிற் சொரியலாய் எண்பதில் பதின்மூன்று பங்கில், நிலத்தில் சொரியயாய் நில. ப ½ நீக்கி மிகுதி அரைவாசியும்

2. ஷை இறை போதியான் நில. ப 4 7/8 - ஷை நில. 4¾ ஆகக் கூடிய நில ப 9, 5/8 இதில் மேற்குப்புறமாக ஒழுங்கைக்குக் கழித்து விடப்பட்ட குளி 11¼ நீககி மிகுதிக்கு நில ப 9 இதில் மேற்குப் புறமாக நில. ப 3 எலலை கிழககு கந்தர் செல்லத்துரைக்குடைய வாதனம், வடக்கு மெல்கியர் கிட்டிணர் பெண் செல்லம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு ரோட்டு இவ்வெல்லைக குட்பட்ட நிலம், பனைகள வடலிகளடங்கலும்.

3. ஷை இறை பெரியபருத்தி மேற்கு நில. ப 5, 3/4 ஷை பெரிய பருத்திதெற்கு அருகதிகம் நில. ப 7½ எல்லை கிழக்கு பின்சொல்லப்படும் 4-ம் ஆதனம், வடககு பொன்னர் இளையதம்பி கைம்பெண் அசுபதிக்கும் மறுபேருககு முடைய வாதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு கணபதியார் ஆறுமுகம் பெண் அன்னம்மாவுக்கும மறுபேருக்குமுடையவாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் அடங்கலிற் சொரியலாய் பத்தில் ஒரு பங்கும்.

4. ஷை இறை பெரியபருத்தி நில. ப 6½ ஷை செய்கை நில.ப 6 ஆக நி ப 12½ எல்லை கிழககு இளையதம்பி கைமபெண் அசுபதிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கு வல்லிபுரம் பெண் கதிராசிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கு மேற் சொல்லிய 3-ம் ஆதனம், தெற்கு சின்னத்தம்பி பெண் இலெட்சுமிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைககுட்பட்ட நிலம் பனைகள் வடலிகளடங்கலிற் சொரியலாய் நாற்பதில் ஏழு பங்கும்.

| | | |
|---|---|---|
| தீர்வைத் தொகை: | ரூபா | 3200-00 |
| வட்டி ரூபா 2000/-க்கு 10 வீதப்படி 21-11-66 தொடக்கம் 8-3-67 வரை | ரூபா | 58-25 |
| வட்டி ரூபா 3258/25-க்கு 5 வீதப்படி 8-3-67 தொடக்கம் 4-10-67வரை | ரூபா | 94-93 |
| செலவுத் தொகை | ரூபா | 282-24 |
| மொத்த | ரூபா | 3635-43 |

"சிவலிங்கநிலையம் க. நல்லலிங்கம்,
வி. எம். ரோட் ஏலவிற்பனை ஆணையாளர் & விலைமதிப்பாளர்.
பருத்தித்துறை 28-10-67 Commier, ssionr Auctionee& Valuer
எம். 293, 3—11—67

### நாவலர் நல்வாக்கு

பிறருக்கு வரும் கல்வி செல்வங்களைக் காணும்பொழுது, பொறாமை இன்றி மகிழ்தலே நன் மனசுக்கு அழகு.

## "திருப்புகழ் கடல்" பெருக் கெடுக்கும் ....!



பத்தர்: "...திருப்புகழ் கடல் எம் ஈழத்திருநாட்டை நோக்கிப் பெருக்கெடுக்க விருக்காம்......! பத்திரிகை அவதான நிலைய ஊழியர்கள் அறிவித்திருக்கிறார்கள்...! எதிரே வரும் 16-11-67 மாலை 6-30 மணியை மிகக் கவனமாகக் கழிக்கவேண்டும்! நினைவாயிருப்!

சித்தர்: என்ன திருப்புகழ்ஆறு? கடலா...? அந்த கடல் எந்தத் தேசத்தில் பாயுது? நான் படிச்ச காலத்தில் அப்படிப் பேருள்ள ஆறு, கடலைக்கேள்விப்படவில்லை புதுக்க ஆற்றைத்தோண்டிவிட்டு இப்படிப் பேர் வைச்சிருக்கா? அல்லது இருந்தாற்போல் ஏதும் ஆற்றுப் பேரை மாற்றியிருக்கின்றார்களா? என்ன பத்தரண்ணே!

பத்தர்: 'ஆறு பெருகப்போகுது' என்றதும் அஞ்சிவிட்டீர்போலே? நான் "திருப்புகழ்கடல்" என்றது மதுரை ஆதினத்து மகாவித்வான் 'அருள்மொழிஅரசு' திருமுருக. கிருபானந்த வாரியார் அவர்களை, "அவதான நிலைய ஊழியர்" என்றது — பத்திரிகை நிருபர்மாரை. ஆனபடியால்அச்சத்தைத்தவிரும்

சித்தர்: நல்ல ஆசாமிகாணும்நீர்! நடுங்க வைச்சிட்டீரே! நிற்க, எப்ப—எங்கை இந்த அருட்கடற் பெருக்கு ஆரம்பிக்குமாமண்ணே?

பத்தர்: வேறெங்கே...? எங்கள் வடபகுதிச் சைவமக்களுட் பலர் திருக்கோவில்விழாக்களென்றதும் கூட்டுப் பிரார்த்தனையை நடத்தவோ, சமயஉண்மைகளைவிளக்கும் பிரசங்கங்களைச் செய்விக்கவோ முன்வந்து நிற்கமாட்டார்கள்...! சிகரங்கள், சின்னமேளம்,வாணம் மின்சார விநோதஅலங்காரங்கள் இவற்றிற்தான் முழுக்கவனமும்! ஆனால் கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீசுவப்பிரமணிசுவாமிகோயில் ஏனையோர்க்கு ஒரு முன் மாதிரி. வாரியாரது தொடர் பிரசங்கத்தை ஒழுங்கு செய்திருக்கினம்!

சித்தர்: உண்மைதான், பக்தியை வளர்க்கவேண்டிய திருத்தலங்களில் எத்தனையெல்லாம்செய்கின்றார்கள்? ஈழத்துப் பொன்னாலைப் பதியில் ...ஒருகோவில் திருவிழாவில் வடககுத்திருவீதியில்சுவாமி வீதிவலம்வரும்போது, மேடையிட்டு நாடகமாம்நாடகம் நடிக்கினம்! ஏன் ஆங்கு, எம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமியவர்கள், கிருபை ஆனந்தவாரியாரவர்கள் போன்ற அருளாளர்களை அழைத்துச் சமயப்பிரசாரம் செய்வித்தால் கலம் பெருகாதா?

"நாயன்மார் - நாதன்"

### இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

| | |
|---|---|
| உள்நாடு | |
| ஆங்கிலம் | 9-00 |
| தமிழ் | 9-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 12-00 |
| வெளிநாடு | |
| ஆங்கிலம் | 10-50 |
| தமிழ் | 10-50 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-50 |

## கோட்டு விற்பனவுவிளம்பரம்

மானிப்பாய் பாட்டன் கனகரெத்தினம் மேதர்
2. பெண் வியாறிஸ் செல்வரெதநனம் —வழக்காளி
இல. M B. 8337 எதிராக
தன்னை மானிப்பாய்: வயிரவி கதிரவேலு —எதிராளகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக கோட்டின் M B. 8337-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுககட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1967-ம் ஆ கார்த்திகை மீ 23-ந் உ வியாழக் கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசிதத ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 1450 இன்னும் 21-7-66 தொடக்கம் 1-12-63 வரைக்கும் ரூபாய் 1000-த்துக்கு 12 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 254-12 சதம் இதில் ரூபா 500 கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோயிற்பற்று உடுவிலிறை "அத்தை" பர- நில. இலா, 5-0 குளி கிணறும் மற்றுமதைச் சேர்ந்தவைகளும் இதற்கெல்லை கிழக்கு சின்னவன் ஐயனுக்குரிய தண்ணீர் வாய்க்காலும் கணபதி ஆசைக்குரியவாதனமும். வடக்கு ஒழுங்கை மேற்கு பண்டாரம் செல்லனுக்கும் பெண் விசாலாஷ்ஷிக்குரியவாதனம் தெற்கு ஐயன் சின்னவனுக்குரியவாதனம் இவ்வெல்லைக்குள்பட்டிருககும் கிணற்றில் மூழு நாள் நீர்ப்பாச்சலில் முற்பகல் நீர்ப்பாச்சல் பிறநீங்கலாகவும் மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றுககு வழி வாய்க்கால், தூர்வைப் பாவிப்புருத்தும் பிறநீங்கலாகவும் அக் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலுருத்தும் மற்றும் காணிகளுக்குரிய தண்ணீர்ப் பங்கும் பிற நீங்கலாகவும்.

செ. விசாகரத்தினம்
133, பருத்தித்துறை ரோட்டு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
நல்லூர், யாழப்பாணம், 29-9-67. M 295 10-11 )

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வட்டுக்கொட்டை சோமசுந்தரம் தையல்நாயகி —வழக்காளி
இல. M. B. 8391 எதிராக
மானிப்பாய், நவரத்தினம் வாமதேவா — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 8391-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1967-ம் ஆ மார்கழி மீ 14-ந உ (14-12-67) வியாழக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விறகப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 4633/50 இதில் ரூபா 4000/-க்கும் 14-8-66 தொடக்கம் 6-12-66 வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் 6-12-66 தொடக்கம் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 257/77 (செலவழித்த செலவு ரூபா 166/45 வெளியாத்துச்செலவு ரூபா 50/12 வரும்செலவு ரூபா 41/20).

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோயிற்பற்று மானிப்பாய் இறை "விக்கப் புலோவும், தச்சன் தோட்டமும்" பர நில. 1 ஏணூறும் குளி 12¼ தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் இறை வாய்க்கால் வழியுரித்தும், செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு பொன்னுச்சாமி கை. மெ, தங்கம்மாவுக்கும் மறுபேருக்குமுரியவாதனங்கள் வடக்கு சின்னத்தம்பி சபாபதியின் உரிமைக்காறரினுதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு நவரத்தினம் கிருஷ்ணதேவனினுதனம் இதடங்கலும்,

இல. 24, முதலாம் குறுக்குத்தெரு, க. சுப்பிரமணியம்.
யாழ்ப்பாணம், கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
3-10-67, எம். 188, 3-11— )


யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிறு சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை J. P.
Std. 14 சிறுப்பர்.


மலரயனுந் திருமாலுங் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக் கோபுரவாயில்
நிலவிய கற்பகக்கன்றி னிறைமலர்த்தா ளினைபோற்றி.


யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், பிரம்மஸ்ரீ க. செ, பாலசுப்பிரமணியஐயர் புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் அவர்களால், 3—11—1967 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்,